**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்.**

**நாள்.04.09.2025**

**O.S. No.343/2015**

**வா.சா.1- செல்வராஜ்**

**1 முதல் 3 மற்றும் 6 வது பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.**

எனக்கு எழுதப்படிக்கத் தெரியுமா என்றால் தெரியாது. என்ன வேலை செய்கிறேன் என்றால் டிரைவராக இருக்கிறேன். நான் என்ன பரிகாரம் கேட்டு வழக்குப் போட்டுள்ளேன் என்றால் இடம்வேண்டும் என கேட்டு வழக்குப் போட்டுள்ளேன். எனது தாத்தா, பாட்டி பெயர் வீரபுத்திரதேவர் மற்றும் பொன்னம்மாள் என்றால் சரிதான். வீரபுத்திரதேவர் மற்றும் பொன்னம்மாளுக்கு மொத்தம் 6 வாரிசுகள் என்றால் சரிதான். வீரபுத்திரதேவர் மற்றும் பொன்னம்மாளுக்கு பிறந்த ஆண் மக்கள் கட்டாரி தேவர் மற்றும் பாலுத்தேவர் என்றால் சரிதான். வீரபுத்திரதேவர் மற்றும் பொன்னம்மாளுக்கு பிறந்த பெண் பெரிய மாடத்தி, சின்ன மாடத்தி, ஆறுமுகத்தாய், கோமதியம்மாள் என்றால் சரிதான். தபசில் சொத்து வீரபுத்திரதேவருக்கு பூர்வீகமாகப் பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். தபசில் சொத்து வீரபுத்திரதேவருக்கு பூர்வீகமாகப் பாத்தியப்பட்டது என்பதற்கு ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆமாம் தாக்கல் செய்துள்ளேன். பிரதிவாதிகள் எனக்கு யார் என்றால் பங்காளிகள் பெரியப்பா மக்கள். நானும் பிரதிவாதிகளும் தபசில் சொத்தை கூட்டாக அனுபவித்து வருகிறோமா என்றால் ஆமாம். 4 வது பிரதிவாதி, 5 வது பிரதிவாதிக்கு சொத்தினை விற்ற விவரம் எனக்கு நேடியாகத் தெரியாது என்றால் சரிதான், 6 மாத்திற்குப் பிறகுதான் மேற்படி கிரையம் பற்றி தெரியவந்தது. தாவா சொத்தினுடைய நான்கு மால் எல்கை என்ன என்றால் தெரியாது. இந்த வழக்கிற்கு வழக்கறிஞருக்கு விவரங்கள் நான் தான் சொன்னேன் என்றால் சரிதான். எனக்கு இந்த வழக்குப் பற்றி எதுவும் தெரியாது எனக்கு எந்தவிதமான பரிகாரங்களும் கிடைக்கக்கூடியது அல்ல என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.**

**மறுவிசாரணை இல்லை.**